Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, APRIL 2, 2022

சனிக்கிழமை ஏப்ரல் 02, 2022 | ஒளி: 07 கதிர்: 272 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## சீமெந்து பக்கெட் ரூ.500ஆல் கூடியது



இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 50 கிலோ கிராம் சீமெந்து பொதியின் விலை 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக விற்பனை முகவர்கள், நேற்று (01) தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனைக்கான

# தாய்மார் போராட்டம் யாழில் ஆரம்பமானது

### குழப்பம் விளைவித்தவர்களை கும்மியெடுத்தனர்



ஐக்கிய மகளிர் சக்தியினர் ஏற்பாடு செய்துள்ள பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனை வரையிலான தாய்மார்களின் போராட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று (01) ஆரம்பமானது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல விடயங்களுக்கு கண்டனம் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் ஐக்கிய மகளிர் சக்தியினர் யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச்செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி P2

அரசாங்கத்துக்கு எதிராக

## பகலிலும் பல போராட்டங்கள்

### 'கோட்டா திருடன்" நுவரெலியாவில் மக்கள் கோஷம்



எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி, அதிக நேர மின்வெட்டு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு உட்பட பல விடயங்களைக் கண்டித்து நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களால் பதற்றமான சூழ்நிலை நேற்றும் (01) நிலவியது.

தொடர்ச்சி P2

கோட்டாவின் வீட்டுக்கு முன்னால்

# கொந்தளித்த மக்கள்

- 'கோட்டா பைத்தியம்' என்று கோஷம்
- விடிந்ததும் மஹிந்த, நாமல் விஜயம்



மிரிஹானை, பெங்கிரிவத்தையிலுள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட வாசஸ்தலத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (31) மாலையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், இரவு வேளையில் பதற்ற நிலையாக மாறியது.

இச்சம்பவத்தில் 18 விசேட அதிரடிப்படை வீரர்கள் உட்பட 24 பொலிஸார் காயமடைந்துள்ளதுடன், மூன்று ஊடகவியலாளர்கள் பொதுமக்கள் உட்பட 15 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில போதனா வைத்தியசாலை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## இன்னல்களின் அதிர்வே

### ஜூபுலி கனுவ போராட்டம்



ஜூபுலி கனுவ பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் ஆர்ப்பாட்டமானது நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் இன்னல்களின் அதிர்வேயாகும். இதை அரசாங்கம் நன்கு உணர வேண்டும். உண்மை பிரச்சினையை திசை திருப்பும் நோக்கில், ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கை

தொடர்ச்சி P2

## கலவரத்தின் பின்னணியில்

### அடிப்படைவாதக் குழு

நுகேகொடை ஜூபிலி சந்தி அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் இருந்த, திட்டமிட்டுச் செயற்படும் அடிப்படைவாதிகள் குழுவொன்று கலவரத்தில் ஈடுபட்டு, வன்முறை நிலையை ஏற்படுத்தியதாக தெரியவந்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு, நேற்று (01) வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## நாளை முழு ஊரடங்கா?



**“மிரிஹானவில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற போது, மிரிஹானவில் உள்ள தனது இல்லத்தில், ஜனாதிபதி இருந்தாரா? என்பது தொடர்பிலான தகவல்களை என்னால் வெளியிட முடியாது**

ஜே.ஏ.ஜோர்ஜ்

நாளை 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்துவது தொடர்பில், இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## இவர்தான் அவர்

மிரிஹானையில் ஜனாதிபதியின் தனிப்பட்ட வாசஸ்தலத்துக்கு முன்பாக, நேற்று முன்தினம் (31) முன்னெடுக்கப்பட்ட போராட்டம் உக்கிரமடைந்தபோது, இலக்க தகடு இன்றி, சிலரை ஏற்றிக்கொண்டு பஸ்ஸொன்று வந்தது.

போராட்டத்தின் உச்சத்தில், அந்த பஸ் தீப்பற்றி எரிந்தது. அதன்பின்னர், சில வாகனங்களும் சேதமாக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## “அமைச்சரவையை கலைக்கவும்”



தற்போதைய அமைச்சரவையை கலைத்து விட்டு இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைத்து தரப்பினருடனும் இணக்கப்பாட்டுக்கு வருமாறு பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

தொடர்ச்சி P2



## அரசாங்கம் களமிறக்கிய குழுவே வன்முறையைத் துண்டியது?

### ஜே.வி.பி கேள்வி: குடும்பமாக வந்தோர் வன்முறையில் ஈடுபட முடியாது எனவும் தெரிவிப்பு

மிரிஹான போராட்டத்தின் போது அரசாங்கத்தால் களமிறக்கப்பட்ட குழுவால் பொதுச் சொத்துகள் சேதப்படுத்தப்பட்டதா என்பதில் நியாயமான சந்தேகம் எழுந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) குற்றஞ்சுமத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

எதிர்ப்பில் ஈடுபட்டோருக்கு எதிராக

## PTA யை பாவிக்க முடியாது

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு



நுகேகொடை, மிரிஹான பகுதியில் எதிர்ப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்ததுடன், ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் சிலர் மிரிஹான பொலிஸ் நிலையத்துக்கு, நேற்று (01) காலை விஜயம் செய்தனர்.

தொடர்ச்சி P2

## மிரிஹானை சீ.ஐ.டியிடம்

மிரிஹானை சம்பவம் தொடர்பான விசாரணை பொறுப்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் (சீ.ஐ.டி) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மிரிஹானையிலுள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தாய்மார் போராட்டம் யாழில் ஆரம்பமானது

ஹிருணிக்கா பிரேமச்சந்திர உள்ளிட்ட ஐக்கிய மகளிர் சக்தி உறுப்பினர்கள் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திற்கு அருகில் ஆரம்பமான எதிர்ப்பு பேரணி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை அண்மித்தபோது, சிலர் இந்தப் பேரணிக்கு இடையூறு விளைவித்தனர்.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் குழப்பம் விளைவித்தவர்களை கும்மியெடுத்தனர். சிலர், ஓட்டோக்களில் ஏற்றிக்கொண்டுச் சென்று தாக்கியதாகவும் அறியமுடிகின்றது. எனினும், அடிவாங்கியவர்களே ஓட்டோவில் ஏறி தப்பிச்சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

## கொந்தளித்த மக்கள்



இரவு வேளையில் போராட்டம் வலுப்பெற்றதைத் தொடர்ந்து மிரிஹான பகுதியில் மின்வெட்டு அமல்படுத்தப்பட்டதுடன், இணைய சேவையும் முடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதுடன், நாட்டின் சில இடங்களில் இணைய சேவையில் சிக்கல்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு எதிராக "கூ" என்று சத்தம் எழுப்பியதுடன், "கோட்டா பைத்தியம்" என்றும் கோஷமெழுப்பிய போராட்டக்காரர்கள், வாசஸ்தலத்துக்கு முன்னால் இருந்த முதலாவது தடுப்பை உடைத்து உள்நுழைய எத்தனித்தனர்.

அதனையடுத்து, பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குண்டாந்தடிகளுடன் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டனர்.

போராட்டம் பதற்றநிலையாக உருவெடுத்ததைத் தொடர்ந்து கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன், இறப்பர் குண்டுகளைக் கொண்டு சூடும் நடத்தப்பட்டது.

மேலும் சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் உட்பட 54 பேர் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ், மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

போராட்டத்தின் போது, இராணுவ பஸ், பொலிஸ் ஜீப், 2 மோட்டார் சைக்கிகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன், நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்ட பவுசருக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

அதன்பின்னர் கொழும்பு, களனி, மிரிஹானை ஆகிய பிரதேசங்களில் அமல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று (01) காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் கைதானோரின் மீது குற்றச்சாட்டப்பட்டதாக தகவல் வெளியாகியிருந்தபோதும் அதனை பொலிஸ் திணைக்களம், நேற்று (01) மறுத்திருந்தது.

கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் உட்பட பொதுமக்களுக்கு ஆதரவாக 300 சட்டத்தரணிகள், மிரிஹானை பொலிஸ் நிலைய வளாகத்தில் நேற்றையதினம் (01) குழுமியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகிய இருவரும், நேற்றுக்காலை மிரிஹானைக்கு களவிஜயம் மேற்கொண்டு நிலைமையை ஆராய்ந்தனர்.

## இன்னல்களின் அதிர்வே ஜூபுலி கனுவ போராட்டம்

வருத்தத்தை தருகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார எம்.பி தெரிவித்தார்.

மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வது நாட்டில் அராஜகம் செய்வதற்கல்ல. தற்போதைய ஜனாதிபதி உட்பட அரசாங்கம் எமது நாட்டை அராஜகத்தின் நுழைவாயிலுக்கு அருகாமையில் கொண்டு சென்று நிறுத்தியுள்ளது. அதனால்தான் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

வைபவங்களுக்கு கூட செல்லவிடாது, ஆளும் தரப்பினர் பயணிக்கும் பிரதான வீதிகளை வழிமறித்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அவர்கள், கூறுபவற்றைக் கூட ஆட்சியாளர்கள் விளங்காதிருப்பது நாட்டின் துரதிர்ஷ்ட மாகும். அடக்குமுறை மற்றும் ஏகாதிபத்திய சிந்தனைகள் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எட்ட முடியாது என நாம் சுட்டிக்காட்டுகிறோம் என்றார்.

## கலவரத்தின் பின்னணியில் அடிப்படைவாதக் குழு

இரும்புக் கம்பிகள், தடிகள், ஆயுதம் தரித்த கும்பல், ஆர்ப்பாட்டக் காரர்களைத் தூண்டிவிட்டு மிரிஹான யில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கி பேரணியாகச் சென்று, கலவரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு வன்முறையில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் பெரும்பாலானோர் திட்டமிட்டு செயற்படும் அடிப்படைவாதிகள் என உறுதியாகியுள்ளதாகவும்

அவர்கள் "அரபு வசந்தம் ஒன்றை இந்நாட்டில் ஏற்படுத்துவோம்" என்று கோஷமிட்டவாறே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில், பெயர் குறிப்பிடாது சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி, மக்களைத் தூண்டிவிட்டு நாட்டைச் சீர்குலைக்கும் நோக்கில் கலவரம் நடத்தப்பட்டுள்ளதாக கைது செய்யப்பட்டவர்கள் தெரிவித்தனர் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

## நாளை முழு ஊரடங்கா?



மிரிஹானவில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்று கொண்டிருந்த போது, மிரிஹானவில் உள்ள தனது இல்லத்தில், ஜனாதிபதி இருந்தாரா? என்பது தொடர்பிலான தகவல்களை என்னால் வெளியிட முடியாது என்றார்.

அரச தலைவர்கள் மற்றும் பிரமுகர்களின் பயணங்கள் தொடர்பிலான விடயங்களை பொதுவெளியில் வெளியிடுவதற்கு தனக்கு அதிகாரம் இல்லை எனத் தெரிவித்த அவர், அவ்வாறு வெளியிடுவது சரியான விடயம் அல்ல என்றார்.



## இவர் தான் அவர்

போராட்ட காரர்களில் ஒருவரே பஸ்ஸுக்கு தீ வைத்தார் என்று கூறப்பட்டது. எனினும், போராட்டத்தை குழப்பி திசைதிருப்பவே பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டது என்றும் சூழ்ச்சிகாரர்களே இவ்வாறு செய்தனர் என்றும் சொல்லப்படுகின்றது.

எனினும், பஸ்ஸின் பின் டயருக்கு தீ மூடிவிட்டு, தப்பியோடிவர் தொடர்பில் புகைப்படம் வெளியாகியுள்ளது

## சீமெந்து பக்கெட் ரூ.500ஆல் கூடியது

அதற்கமைய 1,850 ரூபாயாகக் காணப்பட்ட 50 கிலோ கிராம் சீமெந்து பொதியின் விலை 2, 350 ரூபாயாக அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு என்பன, இந்த விலை உயர்வுக்கு காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பகலிலும் பல போராட்டங்கள்

நுவரெலியா டீசல் தட்டுப்பாடு மற்றும் மக்களின் வாழ்க்கைச் செலவு தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்து வருவதை கண்டித்து நுவரெலியாவில் பெருந்திரளான மக்கள் நேற்று (01) பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நுவரெலியா பஸ் நிலையத்திற்கு முன்பாக பெருமளவான மக்கள் திரண்டதால் பஸ் நிலையத்தில் இருந்து பஸ் சேவைகள் பல மணித்தியாலங்கள் தடைப்பட்டன. பின்னர் நுவரெலியாவில் இருந்து கிறெகரி லேக் பார்க் அருகே ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாக சென்று நுவரெலியா - பதுளை பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, நுவரெலியாவில் கலந்து கொண்ட நிகழ்வு நடந்த இடத்துக்குள் பேரணியாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதிக்கு எதிராக "கோட்டா திருடன்" என்று கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

### மொரட்டுவை

பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து மொரட்டுவை நகர சபையை சுற்றிவளைத்த தச்சர்கள், நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால், அங்கு பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டது. இதனால் மொரட்டுவ குருசா சந்தியிலிருந்து காலி வீதிக்கான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

### புத்தளம்

இதேவேளை, புத்தளம்-சிலாபம் வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதால், அவ்வீதியின் ஊடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

புத்தளம் -கொழும்பு பிரதான வீதியை மறித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாகவே வீதிகள் மூடப்பட்டிருந்தன.

கடந்த 11 நாள்களாக தமது பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் கொண்டுவரப்படவில்லை என தெரிவித்து மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

புத்தளத்தில் லிட்ரோ எரிவாயு விநியோகஸ்தர் எரிவாயு சிலிண்டர்கள் முடிவடைந்ததாக தெரிவித்ததையடுத்து எரிவாயு வரிசையில் நின்றவர்களிடையே பதற்றநிலை ஏற்பட்டது.

### பதுளை

பதுளை நகரிலுள்ள எரிவாயு விநியோக மத்திய நிலையத்திற்கு முன்பாக நேற்று (01) அமைதியின்மை ஏற்பட்டது. டோக்கன் விநியோகிப்பதில் ஏற்பட்ட முரண்பாடு, வரிசையில் காத்திருக்காமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டது.

### காலி

ஐஸ்கட்டியின் விலையை குறைக்குமாறும் எரிவாயு, எரிபொருளை வழங்குமாறு கோரியும் காலியிலுள்ள பெருந்திரளான மீனவர்கள் நேற்று (01) பிற்பகல் காலியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாகல்ல துறைமுகத்தில் இருந்து பேரணியாக காலி நகரத்துக்கு வந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### மருதானை

குடும்பநல சுகாதார ஊழியர்கள், மருதானை டீன்ஸ் வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால், கொழும்பு நகர சபை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

30 ஆண்டு சேவைக்காலத்தை நிறைவுசெய்யும் குடும்பநல சுகாதார ஊழியர்களை விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதை கைவிடுவதற்கு அமைச்சு தீர்மானித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## அரசாங்கம் களமிறக்கிய குழுவே வன்முறையைத் துண்டியது?

கலவரத்தை தூண்டும் வகையில் போராட்டக்காரர்களை களமிறக்குவதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாக கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, நேற்று (01) தெரிவித்தார். குழந்தைகளை சுமக்கும் தாய்மார்கள், முதியவர்கள் மற்றும் முழு குடும்பத்தினரும் போராட்டத்தில் பங்கேற்றனர் என்றும் அத்தகைய நபர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபட முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

பொதுச் சொத்துக்களுக்கு தீ வைப்பதற்கும், அநாகரீகமான முறையில் நடந்து கொள்வதற்கும் உத்தேசித்திருந்தால், கைகளில் குழந்தைகளுடன் வயோதிபர்களுடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருக்க மாட்டார்கள் என கூறினார்.

## PTA யை பாவிக்க முடியாது

ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு அருகில் வியாழக்கிழமை (31) இரவு முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், கைது செய்யப்பட்டுள்ளவர்களை நுகேகொடை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தொடர்பில் சாதாரண சட்டத்தை தவிர்ந்து, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மிரிஹானை சீ.ஐ.டியிடம்

முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தின்போது கலகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டின் கீழ், பெண் ஒருவர் உட்பட 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேல்மாகாண குற்றத்தடுப்பு பிரிவினர் ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான விசாரணை பொறுப்புகள் தற்போது குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

## "அமைச்சரவையை கலைக்கவும்"

தற்போதைய நெருக்கடிகளை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது. ஆகையால், கூடிய விரைவில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

அதன்பின்னர், நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கும், கூடிய விரைவில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கும் இடைக்கால அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள விமல் வீரவன்ச, இதனூடாகவே நெருக்கடியிலிருந்து நாட்டை மீளக் கொண்டுவர முடியும் என்றார்.

**தேவை**

கம்பஹா, தொம்பே முதியோர் இல்லத்துக்கு 10 பேருக்கு சமையல் செய்வதற்கும், சுத்தம் செய்வறத்கும் பெண்கள் இருவர் தேவை. மாதமம் 35,000 ரூபாய். தொடர்புகளுக்கு 0712786153, 0777421420





# காடா, வீடா?

## வாழ்க்கை போராட்டத்துக்குள் சிக்கித் தவிக்கும் வவுனியாலின் ஏழு கிராமத்தவர்கள்

க. அகரன்

ஒரு சமூகத்தின் வாழ்வியல் என்பது, அவர்களின் வாழ்வாதாரம், உணவு பழக்கங்கள், இருப்பிடம், கல்வி நிலை என்பவற்றை அடிப்படையாக கொண்டு காணப்படுகின்றன.

இந்த நிலையில் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் பட்சத்தில், அந்தச் சமூகத்தின் ஏனைய அனைத்தும் செயலிழந்து நாடோடி, இனமாக வாழத்தலைப்படும் என்பது ஜதார்த்தம்.

இந்தநிலையில், இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதியில் தமிழ் சமூகத்தின் வாழ்வியல் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டு வருவதை நாளாந்தம் காணுகின்றோம்.

குறிப்பாக, வன வளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்பன, பொது மக்கள் மீது தொடுத்து வரும் தொடர்ச்சியான அழுத்தங்கள், அந்த மக்களின் வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. அந்த அழுத்தங்கள். ‘சாண்ஏற முழம் சறுக்க வைக்கும்’ கைங்கரியங்களாகவே காணப்படுகின்றன.

இதன் ஓர் அங்கமாகவே, வவுனியா, மதுராநகர் பகுதியில் வனவளத் திணைக்களத்தின் செயற்பாடு, அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

வனவளத் திணைக்களத்தின் காணிகள் என எல்லைப்படுத்திய பிரதேசத்தில், மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலை மாறி, கால்நடைகளும் வனவளத் திணைக்கள பகுதிக்குள் செல்ல தடைவிதிக்கும் மனிதாபிமானத்துக்கு எதிரான செயன்முறையால், சுமார் 1,500க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரங்களும் எதிர்காலமும் அழிவடையும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்துக்கும் வவுனியா சிங்கள பிரதேச செயலகத்துக்கும் எல்லையில் அமைந்துள்ளது இத்திக்குளம், மதுராநகர் ஆகிய கிராமங்கள். இவ்விரு கிராமங்களும் எல்லையோர கிராமங்களாகக் காணப்படும் நிலையில், இத்திக்குளம் கிராமத்தின் ஓர் எல்லையாக காட்டப்பட்ட பகுதி, அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் அசமந்தத்தால் வவுனியா பிரதேச செயலகத்துக்குள் உள்வாங்கப்படாமல், 2017 ஆம் ஆண்டு வவுனியா சிங்கள பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியாக, குறித்த காணி எல்லைப்படுத்தப்பட்டது.

எனினும் தமிழ்க் கிராமங்களான மதுராநகர், இத்திக்குளம், கல்நாட்டியகுளம், எல்லப்பர் மருதங்குளம், சமளங்குளம், முருகனூர் ஆகிய ஏழு கிராமங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்களின் கால்நடைகளும் சிங்கள கிராமான ஈரப்பெரியகுளத்தைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்களின் கால்நடைகளும் குறித்த காணியிலேயே மேச்சலில் ஈடுபட்டு வந்துள்ளன.

இந்நிலையில் குறித்த பகுதி வனவளத் திணைக்களத்துக்கு உரியது என 2021 ஆம் ஆண்டு பத்தாம் மாதம் வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட நிலையிலும், இப்பிரதேசத்தினை சேர்ந்த கால்நடைகள் சுமார் 2,000 வரையில் குறித்த பகுதியிலேயே மேச்சலில் ஈடுபட்டு வந்தன.

வவுனியா மாவட்டத்தில் எந்த பகுதியிலும் மேச்சல் தரை இல்லாத நிலையில், விவசாயம் செய்யப்படாத காலத்தில் வயல்வெளிகளிலும் விவசாய காலங்களில் காட்டுப் பகுதிகளிலும் கால்நடைகள் மேச்சலில் ஈடுபடுவது வழமை.





இதன் காரணத்தால் பல கால்நடைகள் வனவிலங்குகளுக்கு இரையாகிய சம்பவங்கள் இருந்தாலும் கூட, கால்நடை வளர்ப்பாளர்களுக்கு வேறு வழியின்றி குறித்த வனப்பகுதியிலேயே கால்நடைகளை மேச்சலுக்கு விடுவது வழமை.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கத்தின் மீள வனம் உருவாக்கும் திட்டத்தின் ஊடாக, வவுனியா மாவட்டத்தில் தாம் அடையாளப்படுத்திய பல பகுதிகளில் வனவளத்திணைக்களத்தினர் மரங்களை நாட்டி வருகின்றனர்.

இதன் ஒரு செயற்பாடாகவே, இந்த ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு அடிப்படையான கால்நடைகளின் மேச்சல் தரையாக காணப்பட்ட பகுதியில், ‘காயா’ மரங்களை நாட்டும் செயற்பாட்டை முன்னெடுத்திருந்த நிலையில், குறித்த மரங்களை கால்நடைகளை அழித்துவிட்டதாகத் தெரிவித்து, “கால்நடைகள் குறித்த பகுதிக்குள் வந்தால் கைப்பற்றுவோம்; உரிமையாளரை கைது செய்வோம்” என பிரதேச மக்கள் வனவளத் திணைக்களத்தினரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், கால்நடைகளின் உணவுத் தேவையைப் பொறுத்தமட்டில், மக்களுக்கு வேறு வழியின்மையாலும் கால்நடைகள் குறித்த பகுதியில் காணப்படும் ஈரப்பெரியகுளத்தின் நீரேந்து பிரதேசத்திலேயே நீரை அருந்துவதாலும், கால்நடைகளை கட்டுப்படுத்தவோ அல்லது தற்போதைய சூழலில் அதனை தமது வீடுகளில் கட்டி வைத்து தீவனம் வழங்கவோ முடியாத நிலையில் செய்வதறியாது தவிர்த்தனர்.

**கால்நடைகளின் மேய்ச்சல் பகுதிகள், வனவளத் திணைக்களத்தால் வேலி இடப்படுகிறது வருகின்றது**

**கால்நடைகளை நம்பிய வாழ்வாதாரத்தை கொண்டவர்கள் இன்னலில்**

**தற்காலிக திர்வைப் பெற்ற போதிலும் மக்களுக்கு நிரந்த திர்வு கிடைக்குமா?**

ஒவ்வொரு வீடுகளிலும் கணிசமான எண்ணிக்கையில் கால்நடைகள் காணப்பட்டமையால், அவை உணவின்றி தவிக்கும் நிலை தோன்றும் என்பதால், வனவளத் திணைக்களத்தினரின் எச்சரிக்கையையும் மீறி, கால்நடைகளை மேய்வதற்காக குறித்த பகுதிக்கு செல்வதை தடுக்கவில்லை. இதனால் தொடர்ச்சியாக வனவளத்திணைக்களத்தினரால் எச்சரிக்கப்பட்டு வந்த கால்நடை வளர்ப்பாளர்கள், அரசில்வாதிகள், அதிகாரிகள் என அனைவரிடமும் சென்றும் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

இந்நிலையிலேயே, கால்நடைகள் மேய்ச்சல் செய்த பகுதிகள், நீர் பருகி வந்த குளத்தின் நீரேந்து பகுதிகள், வனவளத் திணைக்களத்தால் வேலி இடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு வேலி போடப்படுமாக இருந்தால், கால்நடைகளை நம்பி தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்பவர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம்கொடுப்பார்கள். கால்நடைகளை விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படும் வாய்ப்புள்ளது. இதனால் குறித்த பகுதியில் உள்ள மக்கள் பெரும் பொருளாதார பின்னடைவை எதிர்நோக்குவது மாத்திரமின்றி, பாரிய சமூகப் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர்.

இதன் காரணமாக, அண்மையில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றினை இப்பகுதி மக்கள் மேற்கொண்ட நிலையில், குறித்த பகுதிக்கு வந்த பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் வனவளத் திணைக்களத்தினரை குறித்த இடத்துக்கு வரவழைத்து, தற்காலிக தீர்வைப் பெற்றுகொடுத்தபோதிலும் இந்த பகுதி மக்களுக்கு நிரந்த தீர்வு கிடைக்குமா என்பது ஐயமாகவே உள்ளது.





# நினைவு நாணயம் வெளியீடு




கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் ஒன்றாக 20 ரூபாய் முகமதிப்பு கொண்ட புழக்கத்தில் உள்ள நிலையான நினைவு நாணயம் வெளியிடப்பட்டது.

நிலையான நினைவு நாணயம் இலங்கையில் பணப்பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப்படலாம்.

ஜனாதிபதி செயலகத்தில், அண்மையில் நடைபெற்றற இந்நிகழ்வில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சந்திரிகா என். விஜயரத்னவின் பங்குபற்றுதலுடன் முதலாவது நாணயம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.

மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் அல்லது கொழும்பு மருத்துவப் கல்லூரி என அறியப்படும் இப்பீடம் 1870 இல் அப்போதைய கவர்னர் சேர் ஹெர்குல் ரொபின்சன் என்பவரால் நிறுவப்பட்டது.

இலங்கையில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மருத்துவக் கல்வித் துறையில் ஒற்றை முன்னோடி மையமாக விளங்கிய தெற்காசியாவின் இரண்டாவது பழைமையான மருத்துவக் கல்லூரியாக இது விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# புறம் தள்ளப்படும் கண்ணகை புரம்









சுப்பிரமணியம் பாஸ்கரன்

“ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குச் சென்றுவருவதில் இப்பவே கடும் கஸ்ரம். மழைக் காலங்களில் இதைவிடவும் பெரும் பிரச்சினை. இப்படித்தான் எங்களுடைய கல்வி வாழ்க்கை போகின்றது; இதை யாரும் கண்டுகொள்வதில்லை. ஏனென்றால் இது ஒரு கஸ்ரப்பட்ட பிரதேசம்” என்று கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி செயலர் பிரிவின்கீழ் உள்ள கண்ணகை புரம் கிராமத்திலிருந்து தினமும் கால்நடையாகவும் சைக்கிள்களிலும், முட்கொட்பன் மற்றும் அக்கராயன் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்குச் சென்று வருகின்ற மாணவர்கள் தெரிவித்தனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அநேகமான பிரதேசங்களில், அடிப்படை வசதிகள் கூட இதுவரை ஏற்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றது. இந்நிலையில், கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி உள்ளிட்ட நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அதிக தேவையுடைய நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் காணப்படுகின்றன.

இந்தக் கிராமங்களுடைய தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலையில், அங்கே வாழுகின்ற பல ஆயிரம் குடும்பங்கள் அன்றாடம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

இதில் ஒரு கிராமம் தான், கண்ணகை புரம் என்ற விவசாயக் கிராமம். ஸ்கந்தபுரம் சந்தியிலிருந்து எட்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்தக் கிராமத்தில், யுத்தகாலத்தில் மக்கள் வாழ்ந்தது போன்றே தாம் இப்போதும் வாழ்வதாகவும், இங்கு எதுவித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படவில்லை என்றும் மின்சாரம் மட்டுமே தமக்குச் சரியாகக் கிடைத்திருக்கின்றது எனவும் வேறு எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான அக்கராயன்குளத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விவசாயக் கிராமமான கண்ணகைபுரம் கிராமம் பரந்த ஒரு பிரதேசமாகும்.

இக்குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஆங்காங்கே மேலும் பல குடியிருப்புகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு கண்ணகைபுரம் கிராமத்தில் தற்போது 1,500க்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர்

ஸ்கந்தபுரம் சந்தியிலிருந்து கரும்புத்தோட்டம் ஊடாகச்செல்லும் போது, செம்மண் புழுதியும் குன்றும் குழியுமாக மக்கள் பயணிக்கமுடியாத பாதையொன்றின் வழியாக, பிற்பகல் நான்கு மணியளவில் சில பாடசாலை மாணவர்கள் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் பயணித்துக் கொண்டிருந்தனர்.

குறித்த மாணவர்கள், அன்றாடம் இப்படியே அனுபவித்துவரும் துன்பம், எவருடைய கண்களுக்கும் தெரிவதில்லை. கண்ணகைபுரம் கிராமத்தில் இருந்து (வீட்டிலிருந்து) தினமும் காலை ஆறு மணிக்கு கால்நடையாக பாடசாலைக்கு சென்று, பிற்பகல் பாடசாலையிலிருந்து வீட்டுக்கும் கால் நடையாகவே சென்று வருகின்றனர். இந்தக் கிராமத்துக்க எந்தப் போக்குவரத்து வசதிகளும் இல்லை.

அவர்கள் குறிப்பிடுகையில், “நாங்கள் சீராகப் பயணிப்பதற்கு ஓர் ஒழுங்கான பாதையில்லை. இப்போது குன்றும் குழியும், புழுதியுமாகவுள்ள இந்த வீதியால்போய் வரும் போது, எங்களுடைய சீருடைகள் அனைத்துமே அழுக்கடைக்கின்றன. இப்போது போய், இந்தச் சீருடையை துவைத்துக் காயவைத்து, மறுநாள் இதையே போடவேண்டும். இதைவிட, மழைக் காலங்களில், பாடசாலைக்கு பாதணிகளையோ சீருடைகளையோ இந்தப் பாதையால் போட்டுச்செல்ல முடியாது” என இந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தில், ஆங்காங்கே வானுயர தென்னை மரங்களும் சில பயன்தரு மரங்களும் காட்சி கொடுக்கின்றன. இக்கிராமத்துக்கான பிரதான வீதி, நீரப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமானதாகக் காணப்படுகின்றபோதும், இதுவரை இந்த வீதி புனரமைக்கப்படாது, பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

பருவமழை காலங்களில், பல இடங்களில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளநீர் பாய்வதால் போக்குவரத்து செய்யமுடியாத நிலையும் காணப்படுகின்றது. இந்தப் பகுதியில் வாழும் மக்கள், எந்தத் தேவைகளுக்கு போவதாக இருந்தாலும் அக்கராயனுக்கோ ஸ்கந்தபுரத்திற்கோ செல்லவேண்டும். ஆனால், போக்குவரத்து வசதிகள் இல்லை; சீரான வீதி இல்லை. இவையெல்லாம் தாண்டி ஓட்டோ பிடித்துச் செல்வதாயின் முன்னர் 1,000 ரூபாய் எடுத்தார்கள்; இப்போது விலை 2,500 ரூபாய் செலவாகும். மீள்குடியேறியதில் இருந்து, இன்றுவரைக்கும் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு நாங்கள் கேட்கின்றோம்; எமது தேவைகளின் கோரிக்கை எவர் காதிற்கும் பட்டதாக இல்லை.

முக்கிய பொறுப்பிலிருப்பவர்கள் எங்கள் கிராமத்தில் ஓரிரு நாள்கள் தங்கியிருந்து, எங்கள் கஸ்ரங்களை அனுபவித்துப் பார்க்கவேண்டும் என அந்த மக்கள் தங்களுடைய ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

ஸ்கந்தபுரம் சந்தியிலிருந்து முட்கொம்பன் வரைச் செல்லும் பாதை 2017ஆம் ஆண்டு, பெருந்தொகை நிதி செலவில் புனரமைக்கப்பட்டு மூன்று வருடங்களில் முற்றாகவே பழுதடைந்து விட்டது. ஒரு நீண்ட பிரதேசமாகக் காணப்படுகின்ற இந்தக் கிராமத்தில் கண்ணகைபுரம் மேற்கு, கண்ணகைபுரம் மத்தி, கண்ணகைபுரம் கிழக்கு என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கமக்கார அமைப்புகள் எனப்பல்வேறு பட்ட அமைப்புகள் இருக்கின்றபோதும், இந்த அமைப்புகள் ஒரு வலுவற்ற அமைப்புகளாக இருப்பதனால், அபிவிருத்திகளில் புறக்கணிக்கப்படுவதாகவும் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திகள் போன்று தங்களுடைய கிராமத்தை அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென இந்தப்பகுதியிலுள்ள பலர் தெரிவித்திருந்தனர்.

மருத்துவ வசதி, கல்வி வசதி உள்ளிட்ட அடிப்படை வதசிகளை பெற்றுக்கொள்வதற்கு அடுத்த கிராமங்களை நோக்கி நகர வேண்டிய இவ்வாறான கிராமங்களுக்கான போக்குவரத்து சேவைகள், போக்குவரத்துக்காக பயன்படுத்துகின்ற வீதிகள் சீராகச் செப்பனிடப்படவேண்டுமென்பது இந்த மக்களின் கோரிக்கையாகும்



---

தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்கும்

# வரலாற்றுக் கடன் தீர்ப்போம்

அழிவின் விளிம்பில் திருமங்கலாய்
















அ. அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியாரப்பற்றிலுள்ள சைவக்கிராமம் கிளிவெட்டி; கிளிவெட்டியிலிருந்து ஒன்பது கிலோ மீற்றர் தூரத்தில் மின்சார வேலி போடப்பட்ட அடர்ந்த காட்டின் மத்தியில், திருமங்கலாய் என்ற வரலாற்றுப் பழைமைவாய்ந்த இடத்தில் திருமங்கலாய் சிவன் கோவில் அமைந்துள்ளது.

இவ் விடத்திற்குச் செல்லும் பாதையில் பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் யானைகளின் நடமாட்டத்தை எதிர்கொள்வது சாதாரண நிகழ்வாகவே இருக்கின்றது. இந் நிலையில், திருமங்கலாய் பகுதியில் வாழ்ந்த மூதாதையினரின் வழித்தோன்றல்கள் கிளிவெட்டியில் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது இக்கோவிலின் பெரும் பகுதி, முற்றாக அழிவடைந்து அதன் அழிபாடுகள் ஆங்காங்கே கற்குவியல்களாக காணப்படுகின்றன. ஆயினும் இக் கோவிலின் கட்டட அமைப்பையும் அதன் கலை மரபையும் கோவில் தோன்றி வளர்ந்த காலத்தையும் உறுதிப்படுத்தக்கூடிய நம்பகரமான ஆதாரங்களையும் அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றன.

கருங்கற்களையும் செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்ட இக்கோவிலின் கர்ப்பக்கிரகமும் அதன் மேலமைந்த விமானமும் முற்றாக அழிவடைந்து, அதன் கட்டடப் பாகங்கள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. மற்றும், கோவில் கட்டடங்களும் அத்திவாரமட்டத்தில் சிதைந்து, மண்ணில் மறைந்து கிடக்கின்றன. அத்திவாரம் பெரும் கருங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது, இங்கு ஒரு பெருங்கோவில் இருந்ததற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன.

ஆலயங்களுக்கு தலபுராணம் பாடப்பட்டிருக்குமானால் அந்த ஆலயம் மிகவும் பிரசித்தியும் மகத்துவமும் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்ன காரணத்தால், இவ்வாலயம் அழிந்ததென்பது தெரியவில்லை. ஆனால், ஆலயத்துக்குரிய தலபுராணம் உயிரோடிருக்கின்றது. கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல ஆலயங்களில் ‘திருக்கரைசைப்புராணம்’ இன்றும் படிக்கப்பட்டு வருகின்றது.

திருமங்கலாய் சுவாமி பெயர் சுந்தரலிங்கேஸ்வரர்; திருமங்கலாய் சிவன் கோவிலில் இருந்து, சுவாமி எழுந்தருளிச் சென்று மகாவலிகங்கையில் ஆடியமாவாசியன்றும் மகரமாதத்திலும் தீர்த்தமாடுவார். ஆலயம் அழிந்து வரும் நிலையில் பின்னர் இந்த வழமையின் படி கங்குவேலிச் சிவன் மகாவலிகங்கையில் தீர்த்தமாடி வருகின்றனர்.

திருமங்கலாய் சிவன் கோவிலுக்குரிய ‘திருக்கரைசைப் புராணம்’ இவ்வாலயத்தின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றது. இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மன்னர்கள் பன்னெடும் காலத்துக்கு முன்பே ஆண்டு வந்துள்ளார்கள் என்பதை திருக்கரைசைப்புராணம் கூறுகின்றது.

இந்திய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சிங்கபூதரன் என்பவன், இலங்கைத்துறை என்று சொல்லப்படுமிடத்தில் கப்பலில் வந்திறங்கினான். அப்போது இப் பிரதேசத்தை ஆண்டு கொண்டிருந்தவன் எழில்வேந்தன். இவனுடைய மகள் திருமங்கை. திருமங்கையைச் சிங்கபூதரன் திருமணம் செய்து திருக்கரைசையம்பதியில் அரண்மனையமைத்து நாட்டையாண்டு வந்தான். அரண்மனை அமைத்த இடத்துக்கு, ‘இரணியன் குன்று’ என்று பெயர். இப்பெயர் இன்று திரிபுபட்டு ‘இரணியன் கொட்டு’ என்று வழங்கிவருகின்றது. இந்த சிங்கபூதரனும் மனைவி திருமங்கையும் அமைத்த கோவில்தான் திருமங்கலாய் சிவன் கோவில் என வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர், கங்குவேலி என்ற இடத்தில் திருமங்கலாய் ஆலயத்துக்குரிய மணி ஒன்று காணப்படுகின்றது. இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற்காலத்தில் கங்குவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும்.

இந்த மணியில் ‘திருமங்கலாய் கோவிலுக்கு திருமங்கலாயில் வசித்த பத்திபெட்டி மகன் பத்தன் யுடைய உபையம்’ என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் எழுத்தமைதி கொண்டு, இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17 ஆம் நூற்றாண்டு வரை அழிவடையாத நிலையில் இப்பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரிய வருகின்றது.

இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களாக் காணப்படுகின்றன. ஆனால் அநுராதபுரத்திலும், இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட பல ஆதிகால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பிற்காலத்தில் அவை சுற்றுலாத் துறையின் முக்கிய மையங்களாகவே திகழ்கின்றன.

ஆனால், திருமங்கலாய் சிவன் கோவில் கி.பி 10 ஆம் நூற்றாண்டில் இருந்து 1964 ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் வழிபாட்டு கோவிலாக இருந்துள்ளது. இந்த வரலாற்றுப் பதிவை கோவிலில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் ஆலய மணியும் அங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.


கடந்த 30 ஆண்டு கால யுத்தத்தில் பல தடவைகள் இடம் பெயர்ந்து வாழ்ந்த வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்கு திரும்பியபோது, தமது இருப்பிடங்களைக் காட்டிலும் வழிபாட்டு தலங்களை மீளுருவாக்கம் செய்வதற்கே முக்கியத்துவம் கொடுத்த பெருமைக்குரியவர்கள்.

திருமங்கலாய் சிவன் கோவில் ஒரு வழிபாட்டு கோவிலாக மட்டும் பார்க்க முடியவில்லை. பலதரப்பட்ட மக்களின் பார்வையில் இக் கோவில் இலங்கையிலுள்ள தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படலாம்.

ஆனால், இந்து மக்களைப் பொறுத்தவரை, இக் கோவில் அவர்களின் எதிர்காலச் சந்ததியினரிடம் கையளிக்கப்பட வேண்டிய வரலாற்றுப் பொக்கிஷமாகும். அதற்கு அப்பால், ஈழத்தில் இந்து மதத்திற்கு மிக நீண்ட வரலாறுண்டு என்பதை அடையாளப்படுத்தும் விலை மதிக்க முடியாத மரபுரிமையின் அடையாளமுமாகும்.

இம்மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால், தமிழ் மக்களின் நீண்ட வரலாறும் பண்பாடும் காணப்படுகின்றன.

ஆகவே, இக் கோவிலை மீளுருவாக்கம் செய்து பாதுகாக்க வேண்டியது, தமிழ் மக்களின் கைகளில் இருக்கின்றது. இந்த வரலாற்றுக் கடமையில் தமிழ் மக்கள் ஒன்றிணைவார்களா?




### கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரி அன்னையின்

# மஹா கும்பாபிஷேக பெருவிழா



எச்.எச். விக்கிரமசிங்க

**எண்ணெய்க் காப்பு – 04 ஆம் திகதி காலை 8 மணி முதல் 5 ஆம் திகதி மாலை 05 மணி வரை. மஹா கும்பாபிஷேகம் –06 ஆம் திகதி காலை 09:30 மணி முதல் 10:30 மணி வரை**



கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில், 168 வருடங்களாக அடியார்களுக்கு அருள்பாலித்து வரும் அன்னை முத்துமாரியின் திருவருளாலும் தமிழும் சைவமும் தருமமும் பேணி, பெரும் இறைபணியாற்றி வரும் திருவிளங்க நகரத்து அறங்காவலர் நிர்வாகசபையினரின் பெருமுயற்சியாலும் பக்த அடியார்களின் பேராதரவாலும் பல புதிய திருப்பணிகள் செய்து, அழகுற வர்ணம் தீட்டி, பங்குனி மாதம் 23ஆம் நாள் (06-04-2022) புதன்கிழமை காலை 9:30 முதல் 10:30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ முத்துமாரி அன்னைக்கும் விநாயகப்பெருமான் உட்பட பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

ஆலய அமைப்பு முறையில் புதிய சில மாற்றங்களைக் கொண்டுவருதல், அடியார்களின் வழிபாட்டுக்கு வசதி செய்தல் போன்ற காரணங்களுக்காக தமிழ்நாடு, சீர்காழி, திருவெண்காடு, சிற்பக்கலை ஆசான், கோவிந்தசாமி, மதியழகன் ஸ்தபதி தலைமையிலான பத்து சிற்பக் கலைஞர்களின் உதவியோடு, கொவிட்-19 பெருந் தொற்று காரணமாக நாடே ஸ்தம்பித்திருந்த சூழ்நிலையிலும், ஆலய நிர்வாகக்குழு புணருத்தாரண நடவடிக்கைகளில் கடந்த பல வருடங்களாக ஈடுபட்டது.

ஆலய அறங்காவலர் சபையைச் சேர்ந்த டொக்டர் எம். ராமயசுப்பு, எஸ். செல்வரட்ணம், எம். வடிவேல், எஸ். சிவகுமார், எஸ். முத்துராமலிங்கம் ஆகியோரின் பெருமுயற்சியாலும் நீண்டகாலமாகத் தடைப்பட்டிருந்த கும்பாபிஷேகப் பெருவிழாவை நடத்தியே தீரவேண்டும் என்ற உத்வேகத்தாலும் பக்தர்களின் அனுசரணையாலும் பக்தி உணர்வாலும் தெய்வத்திருவருளாலும் சிறப்பாக நிறைவு செய்திருக்கிறார்கள். ஆலய புனருத்தாரண நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே உள்ள அமைப்புகள் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் புதிதாகவும் சில பரிவார மூர்த்திகள் அமைக்கப்பட்டுள்ளன. மூலஸ்தானத்தில் வழமைபோல் அன்னை முத்துமாரி அமர்ந்து அருள் பாலிக்கின்றாள்.

அன்னை முத்துமாரி அம்மை அருளின், அன்பின் இரக்கத்தின், கருணையின் ஒரு குறியீடு. வன்முறையும் கோரதாண்டவமும் கொவிட் தொற்றும் நமது நாட்டின் பொருளாதார நெருக்கடியும் தலைவிரித்தாடும் இன்றைய சூழலில் பொறாமையும், எரிச்சலும், பிறர் வாழப் பொறுக்காத தன்மையும், சமூக வாழ்வில் நன்கு வேரூன்றிவிட்ட இக்காலகட்டத்தில் அன்பையும், இரக்கத்தையும் யாசிப்பது ஒரு தார்மீகக்கடமை என்பதை நன்குணர்ந்த திருவிளங்க நகரகத்தார், தமிழகத்தில் மட்டுமன்றி தாம் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தெய்வீகத் திருப்பணிகளைச் செய்து வருவது நாம் பெற்ற பெரும் பேறாகும்.


**தல பெருமைகள்**

காசி என்றதும் விசாலாட்சியும், காஞ்சி என்றதும் காமாட்சியும் மதுரை என்றதும் மீனாட்சியும் நினைவில் எழுவதுபோல் கொட்டாஞ்சனை என்றதும் முத்துமாரி அம்மைதான் நினைவில் வருகின்றாள். அருளாட்சி நடத்தும் அன்னையாக நந்தன சுந்தரியாக, சிறுமை கண்டு பொங்கும் தேவியாக, மகிஷாசுர மர்த்தனியாக, கொடுமையைக் கருவறுக்கும் காளியாக, பசிப்பிணி போக்கும் அன்ன பூரணியாக, அரனுடன் கலந்து அர்த்த நாரியாக, திருக்கோலம் காட்டும் அன்னை முத்துமாரியாக கொட்டாஞ்சேனை பதியில் குடி கொண்டுள்ளமை நாம் பெற்ற பெரும் பாக்கியமாகும்.



கோவிந்தசாமி, மதியழகன் ஸ்தபதி

ஆலய அறங்காவலர்கள்



கும்பாபிஷேக பிரதம குருவான என். சர்வேஸ்வர சிவச்சாரியார்

**பூஜை கிரியைகள்**

சுன்னாகம் ஸ்ரீ கதிர்மலைச் சிவன்கோவில் ‘முத்தமிழ் குருமணி’, சிவஸ்ரீ நா. சர்வேஸ்வர குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ மு. ரவிபாஸ்கர குருக்கள், பிரம்மஸ்ரீ பரமானந்த சனாதன சர்மா, சிவாகம பூஷ்ணம் பிரம்மஸ்ரீ விக்னேஷ் சிவாச்சாரியார் ஆகியோர்களுடன் ஆலய தேவஸ்தான குருமார்களான சிவஸ்ரீ பால கணேஷ் குருக்கள், பிரம்மஸ்ரீ சண்முகானந்தா குருக்கள், பிரம்மஸ்ரீ எஸ். சுரேஸ்குமார் சர்மா, பிரம்மஸ்ரீ வி. ஞானசேகர சர்மா மற்றும் இளஞ்சுடர்களான கே. துஷாந்தன், ரா. நவின்குமார் ஆகியோரின் மங்கள இசையுடன் திருவருள் பாலிக்கச் செய்கிறார்கள்.

**தலவரலாறு**

புராதன தொன்மையும் வரலாற்றுச் சிறப்புமிக்க கொட்டாஞ்சேனை முத்து மாரியம்மன் ஆலயம் தென்னிந்தியா, கோவில்பட்டி தாலுகாவிலுள்ள எருக்கன்குடி அம்மன் கோவில் நிலத்தின் மண் இங்கு கொண்டு வரப்பட்டு சைவப்பெரியார் காளியன் செட்டி குப்பமுத்து என்பவரால் இவ்வாலயம் நிறுவப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் அரச சுவடிகள், திணைக்கள ஆவணங்கள் என்பன தெரிவிக்கின்றன.

இலங்கையில் வாழ்ந்த திருவிளங்க நகரத்தார் எனப்படும் வணிக வைசிக செட்டியார் சமூகத்தவர்களின் பரிபாலனத்தின் கீழ் 1864 ஆம் ஆண்டு முதல் இவ்வாலயம் இயங்கி வருகின்றது. சில காலமாக ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும் செயலிழந்த நிலையில் இருந்ததை அவதானித்த சமூகப்பெரியார் ஒருவ,ர் ஐந்துபேர் கொண்ட தர்மகர்த்தா சபையிடம் இவ்வாலய நிர்வாகத்தைக் கையளிக்க வேண்டுமென்று நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தார். சகல அலுவல்களையும் அவரே மேற்கொண்டார். இறுதியில் ஸ்ரீ அம்பிகையின் பேரருளால் 1950 ஆம் ஆண்டு நிறைவேறியது.

இவ்வாலய நிருவாகத்தைக் கையேற்ற நிர்வாக சபையினரின் இடையறாத முயற்சியாலும், பக்தர்களின் பேருதவியாலும் திருப்பணி செய்து 1954 ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர். இக்கும்பாபிஷேகத்தின் பின்னர் இவ்வாலயம் சகல சிறப்புகளையும் பெற்று விளங்கியது.

ஜாதி, மத பேதமின்றி சகல பக்தர்களும் அம்பிகையைத் தரிசிக்கவும் அம்மையின் அருள் கடாட்சத்தைப் பெறவும் இவ்வாலயம் வழிவகுக்கின்றது. 1955 ஆம் ஆண்டில் இரண்டாவது நிர்வாகசபையை பொறுப்பேற்றவர்கள் ஆலயத்துக்குச் சுற்றுப்புறத்திலுள்ள காணிகளையும் வாங்கி மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைப் போன்று நான்கு ராஜகோபுரங்களை அமைக்கத் திட்டமிட்டிருந்தனர்.

1963 ஆம் ஆண்டு முதல் தைப்பூசத் திருவிழாவை ஆடிவேல் போன்று ஐந்து தினங்கள் கொண்டாடி வந்தனர். அம்பிகை ரதத்தில் எழுந்தருளி கப்பிகாவத்தை சிவன் ஆலயத்தில் மூன்று தினங்கள் எழுந்தருளி மீண்டும் கொட்டாஞ்சேனைப் பதியை வந்தடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து 1967 முதல் மாசிமக உற்சவத்தையும் சிறப்பாக ஆரம்பித்துள்ளனர். 27-02-1967 இல் நடைபெற்ற மாசிமக உற்சவத்தில் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க கலந்து ஆரம்பித்து வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது ஆலயத்தை வழிநடத்தி வரும் நிர்வாக சபையினர் சிறப்பான முறையில் ஆலயத்தை நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### இலங்கையின் ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயம்:

# மடத்தடி மீனாட்சி அம்மன்

## ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா



விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா







வரலாற்றுப் பிரசித்திபெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை (06.04.2022) நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதம குருவாக ஆலய பிரதமகுரு சிவாகம வித்யாபூஷணம் சிவாச்சார்யதிலகம் பிரதிஸ்டாதிலகம் ஜோதிட வித்யாதத்துவநிதி விபுலமணி சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் செயற்படுகிறார்.

இன்று, இரண்டாம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஐந்து மணிக்கு கர்மாரம்பத்துடன் கிரியைகள் யாவும் ஆரம்பமாகும். எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் திங்கள் (04)காலை 8மணி முதல் செவ்வாய்க்கிழமை (05) பி.ப.3 மணிவரை நடைபெறவுள்ளது.

ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு நிறைவுற்ற கையோடு, பிற்பகல் நான்கு மணிக்கு ஆலய முன்றலில் ஒரு மணிநேர சூரசம்ஹாரம், காத்தவராயன் ஆகிய இரு வடமோடி நாட்டுக்கூத்துகள் நடைபெறவுள்ளன. மறுநாள், மஹா கும்பாபிஷேகம் காலை 9.12மணி முதல் 10.27மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெற அருள்பாலித்துள்ளது.

ஆலயகுரு சிவஸ்ரீ ச.ஹோவர்த்தன சர்மா ஒழுங்கமைப்பில் சர்வசாதகராக ஆரியபாஷா விற்பன்னர் சிவஸ்ரீ சண்முக மயூரவதனக்குருக்களும் பிரதிஸ்டா குருவாக கிரியாஜோதி சிவஸ்ரீ வே.யோகராசா குருக்களும் செயற்பட மகேஸ்வர பூஜையை கோ. ஜனபாலச்சந்தி ரன் (அவுஸ்திரேலியா) வழங்கவுள்ளார்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து, 24 தினங்கள் மண்டலாபிசேக பூஜைகள் இடம்பெறுமென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.

### அமைவிடம்

இலங்கையில் இருக்கும் ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயமான அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட மருதநிலச் சூழலில் எழுந்தருளியிருக்கும் மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம், 500 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைமை வாய்ந்ததாகும்.

சுற்றிவர பச்சைப்பசேலென்ற வயல்வெளிகளுக்கு மத்தியில் ஆலமரம், அரசமரம், மாமரம், கமுகு, வில்வை, தென்னை மரங்கள் நிறையப்பெற்ற ஒரு மனோரம்மியமான சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இங்கு சென்றவர்கள், உடனே திரும்ப முடியாதளவுக்கு இந்தச் சூழல் பக்தர்களை சுண்டி ஈர்க்கிறது.

### ஆலய வரலாறு

1624 ஆண்டு காலப்பகுதியில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அக்காலத்தில் வன்னிமையின் சிற்றாட்சி நிலவியது.

அட்டப்பள்ளத்தை மையமாகக் கொண்டு நிந்தவூர் பற்று வன்னிமையான சிங்காரபுரி வன்னிமை ஆட்சி நிலவியது. சிங்காரபுரித்தோட்டத்தில் இருந்து அட்டப்பள்ளம் தொடக்கம் காரைதீவு வரையான பிரதேசத்தை பூபாலகோத்திரத்து வன்னிமை பரிபாலனம் செய்துவந்தான். அதனை சிங்காரத்தோப்பு எனக்கூறுவர். அங்கிருந்து, வன்னிமை யானை மீதேறி அப்பிரதேசமெங்கும் வலம்வருவது வழமை.

சிங்காரபுரி வன்னிமை, மடத்தடி எனும் இடத்தில் ஆலயமொன்றை அமைத்து அருகில் தீர்த்தக்கேணியையும் அமைத்து வழிபட்டுவந்தார். இவ்வாலயமானது, போத்துக்கேயர் ஆட்சிக்காலத்தின் பிற்கூற்றில் புளியந்தீவிலிருந்து வந்த படைகளால் சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

### ஆலய கலாசாரம்

இந்த ஆலயம் சிதைவுற்றதன் பின்னர், கிழக்காக அரசமரத்தின்கீழ் பிராந்திய மக்களின் அனுசரணையில் புதிய ஆலயம் அக்காலத்தில் அமைக்கப்பட்டது. இங்கு ஆலயத்தைச்சூழ பாம்புப் புற்றுகள் நிறையவுள்ளன. அதாவது இங்கு அம்மன் வழிபாட்டிற்கு மேலதிகமாக நாகவழிபாடும் நிலவுகிறது.

வெள்ளி பௌர்ணமி மற்றும் விசேட தினங்களில் இங்கு கதவு திறந்து அம்மனுக்கு பொங்கல் செய்வது வழக்கம். அந்நாள்களில் இங்கு 1,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் ஒன்றுகூடுவது அம்மனின் அற்புதமே. பூரணையன்று அங்கு கண்டெடுக்கப்பட்டு பிரதிஸ்டை செய்த சிவலிங்கத்துக்கு பக்தர்கள் பூச்சொரிந்து வழிபடுவர்.

### புற்றுக்குள் சிவலிங்கம்

இச்சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்ட வரலாறு சுவையானது. 2011 மே மாதத்தில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த அம்மன் பக்தையான மல்லிகா என்பவருக்கு அம்மன் கனவில் தோன்றி, ஆலயவளாகத்திலுள்ள குறித்த புற்றில் சிவலிங்கம் இருப்பதாகவும் அதனை எடுத்து ஆலயத்துக்குள் வைக்கும்படியும் சொல்லப்பட்டது.

இதை ஆலய நிர்வாகத்தினரிடம் மல்லிகா கூற, அவர்களும் கல்லாற்றிலுள்ள குடைச்சாமி சித்தரைக் கொண்டு அச்சிவலிங்கத்தை விசேட வழிபாட்டுடன் வெளியே எடுத்து, 2011 மே மாதம் எட்டாம் திகதி ஆலயத்துக்குள் வைத்தனர்.

இந்தக்காலகட்டத்தில், 2011 ஒகஸ்ட் ஆறாம் திகதி காரைதீவு சித்தர் ஆலயத்தில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட வெண்கல சித்தர் விக்கிரகத்தை பிரதிஸ்டை செய்வதற்காக, இந்தியாவிலிருந்து காகபுசுண்டர் அன்னைசித்தர் ராஜ்குமார் சுவாமிகள் வருகைதந்திருந்தார். அவருடன் மாதாஜி ராதாவும் வந்திருந்தார். அவரிடம் அப்போதைய தலைவர் கோ. கமலநாதன் கேட்டுக்கொண்டதற்கிணங்க மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தில் சக்திவாய்ந்த சித்தர்கள் யாகம், மாதாஜி தலைமையில் நடைபெற்றது.

பிள்ளைப்பேறு இல்லாத பலருக்கு, மீனாட்சி அம்மன் அந்த வரத்தை வழங்கியுள்ளார். வேண்டுகின்ற பலரது இன்னல்களை தீர்த்துள்ளார். இதனால் இப்பிராந்திய மக்களுக்கு அம்மன் மீதான பயபக்தி அதிகரித்தது .

### பரிபாலன வரலாறு

ஆரம்பத்தில் இது ஒரு குடும்பத்திற்குரிய சொந்த ஆலயமாக இருந்தது. 1985களில் இவ்வாலயம் பதியப்பட்டிருந்தது. தம்பிமுத்து என்பவரின் சொந்தப் பராமரிப்பிலே இயங்கிவந்தது. பிற்பட்ட 1990களில் தம்பிமுத்து என்பவரின் ஏக புதல்வரான வினாயகமூர்த்தி தொடர்ந்து தன்னந்தனியனாக அவ்வாலயத்தை பராமரித்து வந்தார்.

இந்நிலையில், 1996களிலிருந்து இவ்வாலயம் காரைதீவை மையமாகக்கொண்டு, பலகிராமங்களின் பல பிரமுகர்களைக் கொண்ட நிர்வாக சபையினரால் பொதுக்கோவிலாக நிர்வகிக்கப்பட்டது.

அதன்பிற்பாடு, தம்பிலுவிலைச்சேர்ந்த அதிபர் வ. ஜெயந்தனைத் தலைவராகக் கொண்டு பரிபாலனசபை அமைக்கப்பட்டு இயங்கிவந்தது. இவரது காலத்தில் (2012) தற்போதுள்ள புதிய ஆலயம் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. கிழக்கிலங்கையின் இந்துகுருமார் சங்கத் தலைவரான சிவஸ்ரீ நீதிநாதக் குருக்களைத் (தற்போதைய ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்களின் மாமனார்) தொடர்புகொண்டு பூப்போட்டுப் பார்த்து, புதிய ஆலயம் தற்போதைய இடத்தில் கட்டுவதற்கு கால்கோள் இடப்பட்டது.

அதன்படி, 2013இல் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நடும்விழா இடம்பெற்றது. சிவஸ்ரீ நீதிநாதக்குருக்கள் முதலாவது அடிக்கல்லை நட்டு ஆரம்பித்துவைத்தார். கருவறைக்குரிய அடித்தளம் இடப்பட்டது.

அதன்பின்பு, காரைதீவைச் சேர்ந்த கோ. கமலநாதன் தலைமையிலான பல ஊர்களையும் சேர்ந்த நிர்வாகசபையினர் தெரிவாகி ஆலய நிர்மாணப்பணி முன்னெடுக்கப்பட்டது. அக்கரைப்பற்று, திருக்கோவில்,டு ஆலயடிவேம்பு, காரைதீவு போன்ற கிராமங்களின் பரோபகாரிகளின் பெரும்பங்களிப்பால் புதிய ஆலயம் அமைக்கப்பட்டது. இருப்பினும் அதற்கான கும்பாபிசேகம் கடந்த ஆறு வருடகாலமாகத் தடைபட்டுவந்தது.

இந்நிலையில், தலைவராகவிருந்த கோ. கமலநாதன் 2021.10.21 இல் இறைபதமடைந்தார். அதன்பின்பு 2021.10.24 இல் ஆலயத்தில்கூடிய நிர்வாகசபையினர், உபதலைவராகவிருந்த காரைதீவைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலை தலைவராகத் தெரிவுசெய்தனர்.

பல ஊர்களிலிருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் பலவிதமான உதவிகள் கிடைக்கப்பெற்றதை அடுத்து, ஆலயத்தில் இதுவரைகாறும் இல்லாத குழாய் குடிநீர் விநியோகம், அன்னதான மண்டபம், கழிவறைத்தொகுதி எனப் பல வேலைத்திட்டங்களை சொர்ணம் விஸ்வநாதன், ‘ஆர்க்கிரெக்ட்’ மகேந்திரன், ‘டொக்டர்’ அ. வரதராசா, ‘அவுஸ்திரேலியா’ பாலன், ‘சரவணாஸ்’ லதன், காரைதீவு எஸ் சுகுமார் உள்ளிட்ட பல பரோபகாரிகளின் உதவியால் மேற்கொள்ளப்பட்டன. ஆலய முகப்பையும் அழகான கோபுரஅமைப்புடன் புனரமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தில் கும்பாபிசேகம் தொடர்பான நாள் தீர்மானிக்கப்பட்ட போது, ஆலயமணி மூன்று தடவைகள் தானாக அடித்து, அம்பாளின் அற்புத ஆணையும் வழங்கப்பட்டது. இவ்வாலயம் மேலும் சிறப்புற்று விளங்க அம்மனருள் என்றென்றும் கிடைக்கப்பெறுவதாக.

# சீற்றத்தில் இருந்த மக்களை சீண்டிப் பார்த்த ‘கறைபடிந்த கரிநாள்’

ஆட்சியாளர்களில் பெரும்பாலானவர்கள் மக்களை முட்டாள்களாகவே நினைக்கின்றனர். ஆனால், முட்டாள் தினத்துக்கு முதல்நாள் இரவே, ‘முட்டாள்கள் நாங்கள் இல்லை’ என்பதை மக்கள் நிரூபித்துவிட்டனர். அன்று இரும்பு கரத்தை கொண்டு அடக்கியதால், இலங்கை வரலாற்றிலேயே 2022 மார்ச் 31 கறைபடிந்த கரிநாளாகிவிட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் வீட்டுக் கதவை தட்டுமளவுக்கு, முன்னாள் ஜனாதிபதிகள் இருக்கவில்லை. நுகேகொடை, மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட வீட்டுக்கதவு தட்டப்பட்டுவிட்டது. ஆக, மக்களின் சீற்றம் கொஞ்சமேனும் தணியவில்லை.

ஒரு சம்பவத்துக்குப் பின்னர் ஜோடிக்கப்பட்ட பின்னணியை கூறுவது இலகு; அதுதான், ‘அடிப்படைவாதி குழு’ என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட நாட்டில் இவ்வாறான குழு இருப்பது தொடர்பில் அரச புலனாய்வு துறைக்குத் தெரியாமல் போனது ஏன்?

பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து நடத்தப்படும் போராட்டங்களில் பங்கேற்பவர்கள் அனைவரும் அடிப்படைவாத குழுவைச் சேர்ந்தவர்களா? தன் இயலாமையை ‘அடிப்படைவாத குழு’ என்பதற்குள் அரசாங்கம் மூடிமறைக்க முயற்சிக்கின்றது. அதுதான் முட்டாள்தனமான முடிவாகும்.

சமூக வலைத்தளங்களின் ஊடாக அழைப்பு விடுத்து, மிரிஹானவில் நடத்தப்பட்ட போராட்டம் முதலாவது அல்ல; இறுதியானதாகவும் இருக்கமுடியாது. ஏனெனில், மக்களின் இரத்தத்தில், சமூக வலைத்தளங்கள் கலந்துவிட்டன.

சீற்றத்தில் இருந்த போராட்டக்காரர்கள் சீண்டிப்பார்க்கப்பட்டனர். இதனால், தாக்குதல், பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில், ஊடகவியலாளர்கள், படைத்தரப்பினர், பொதுமக்களென 37 பேர் காயமடைந்தனர். பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், ஊடகவியலாளர்கள் உட்பட 34 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

‘அடிப்படைவாத குழு’ என அரசாங்கமே அறிவித்துவிட்டமையால், பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய, பொலிஸாருக்கு வழிகாட்டப்பட்டுவிட்டது. ஆக, நன்கு திட்டமிட்டு ஜோடிக்கப்பட்டுள்ளது. இது, எதிர்வரும் நாள்களில் நடத்தப்படும் போராட்டங்களை மழுங்கடிக்கச் செய்யும் முயற்சியாகவும் கருதலாம்.

மிரிஹானையில் ஒன்றுதிரண்டவர்கள், பஸ்களில் குழு, குழுவாக வரவில்லை. அப்படியாயின், இலக்க தகடில்லாத பஸ்ஸில் வந்திறங்கியவர்கள் யார்? அந்த பஸ்ஸூக்கு தீ மூட்டிவிட்டு தப்பியவர் யார்? இதன் பின்னணியில் சூழ்ச்சியாளர்களின் கை ஓங்கியிருந்திருக்கிறது என்பதற்கான சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

நாட்டில் இராப்பகலாக, மின்வெட்டு அமல்படுத்தப்படுகின்றது. அப்படியிருந்தும், ஜனாதிபதியின் தனிப்பட்ட வீட்டுப்பக்கத்தில் மின்வெட்டப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு இருந்தன. இந்நிலையில், போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், திடீரென மின்வெட்டு அமலானது எப்படி? இதுவும் சந்தேகமே.

அரசாங்கத்தின் மீது மக்கள் சீற்றத்துடன் இருகின்றனர். வாழ்க்கையைக் கொண்டு நடத்தமுடியாமையால் வீதியில் இறங்கியுள்ளனர். அவ்வாறானவர்கள் இரும்பு கரம்கொண்டு அடக்கினால், மீண்டும், மீண்டும் கறைபடிந்துவிடும் என்பதை நினைவில் கொள்க!

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள் www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

கோபப்படுவது மனித இனத்துக்கு மட்டுமல்ல, விலங்குகள், பறவைகள், ஊர்வன என அனைத்து இனங்களுக்கும் உரிய குணமாகும்.

கோபப்படாமல் இருந்தால், செய்யாத தவறுகளை ஏற்றுக்கொள்வதாக அமைந்துவிடும். அடாது பழி சொல்பவர்களின் பேச்சுகளைக் கேட்க முடியுமா? தேவையற்ற கோபங்களால் பயன்இல்லை.

சினத்தை அடக்குவது சில சமயங்களில் நெஞ்சத்தில் சுமைகளை ஏற்றிவிடலாம். நியாயங்களைப் பேச வேண்டும். அநியாயங்களை அடக்க, கோபமே பெரும் சக்தியாகி விடுகின்றது. அமைதி என்பது அச்சத்துக்கானது அல்ல; துஷ்டர்களை அடக்க வேண்டிய இடத்தில் அடக்கியே தீரவேண்டும். ஆனால், வன்முறை ஆகாது.

நியாயவான்களின் சினம், கொழுந்துவிடும் தீயிலும் பெரிதானது. தர்மத்தை எவர் மீறினாலும் பசுபோல் இருப்பவர்களும் புலிபோல் ஆகிவிடுகின்றார்கள். சட்டத்தை மதிக்காமல் விட்டால் அமைதி குன்றும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நிதானம் இழக்கும் அரசியல்

லக்ஸ்மன்

மக்கள் கிளர்ச்சி ஒன்றே தீர்வுக்கான வழி என்ற நிலை தோன்றியிருப்பதாகவே உணரமுடிகிறது. ஆனால் ஆட்சி மாற்றம் நிச்சயமான தீர்வல்ல என்பது மாத்திரம் உண்மை. இதனை மக்கள் உணரத் தலைப்படவேண்டும். இப்போது நாட்டுக்கும் மக்களுக்கும் தேவையானது, நிதானமும் அதனுடன் இணைந்த தீர்மானமுமேயாகும்.

போராட்டங்கள் வெடிக்கின்றன. அவற்றினை அடக்குவதற்கான வழிகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன. இந்த வழிமுறைகள் புதியவையல்ல. தமிழர்களின் உணர்வுகளையும் போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் அடக்குவதற்காக கண்டுபிடிக்கப்பட்ட முறைகளே அவை.

அவை இப்போது சிங்கள முஸ்லிம் மக்களையும் அடையாளப்படுத்துகின்றன. அதனால்தான், மக்கள் கிளர்ச்சியை அடிப்படைவாதத்தின் பெயரை கொண்டு அடக்க அரசாங்கம் முயற்சிப்பதாக கருத்துகள் வெளிவரத் தொடங்குகின்றன. நேற்று முன்தினம் (31) வியாழக்கிழமை மிரிகானையில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னால், அடிப்படைவாதிகள் இருப்பதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்தமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

தொழில்நுட்பங்கள் வளரும் போதும் மேம்படும் போதும் உண்மையிலேயே நாம் சோம்பேறிகளாக மாற்றப்பட்டுவிடுகிறோம். ஊதாரணமாக மின்சாரம்; மின்சாரம் இல்லாது நாம் வாழ்ந்திருக்கிறோம். ஆனால், இப்போது முடியவில்லை. உணவு விடுதிகள் இன்றி நாம் சமைத்தே அனைத்து உணவுகளையும் உண்டிருக்கிறோம். தொலைபேசி இல்லாத உலகம் இருந்திருக்கிறது. இணையவசதி இல்லாதிருந்திருக்கிறோம். சமையல் எரிவாயு இல்லாமல் விறகு அடுப்பை மாத்திரம் நம்பி வாழ்க்கை நடத்தியிருக்கிறோம். இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகமுடியும்.

ஆனால், எரிபொருள், மின்சாரம், கேஸ், உணவு பொருட்கள் என அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை பொறுக்கமுடியாமல் மக்கள் அனைவரும் வீதிக்கு இறங்கும் நிலை வந்துவிட்டது. இது அடிப்படைப் பிரச்சினையாக இருக்கிறது. இதனைத் தீர்த்து வைக்க வேண்டியது அரசாங்கமே. ஆனால், மக்களும் சிலவற்றை அனுசரித்தே தீரவேண்டும். இவற்றிற்கான தீர்வு எதனையும் முன்வைப்பதற்கு முடியாது என்றால் அரசாங்கம் எதற்கு, ஜனாதிபதி ஏன் என்பதே மக்களுடைய கேள்வியாக இருக்கிறது.

இந்தக் கேள்விக்கான பதில் நியாயமானதாகவும் நிதானமானதாகும் இருந்தால் போதுமே தவிர வேறு ஒன்றுமில்லை. விலை அதிகரித்திருக்கிறது. என்றாலும் பொருட்கள் இல்லை என்றால் அதன் நியாயம் என்ன என்பதே பிரச்சினையாகும்.

இதன்மூலமாக மக்களிடம் ஏற்பட்டிருக்கின்ற அச்சம் அவர்களை வீதிக்கு இறங்கச் செய்துவிட்டது. அதிகமான பொருட்களை சேமிக்கச் செய்துவிட்டது, இன்று இருக்கும் எந்தப்பொருளுக்கு நாளை விலை அதிகரிக்கும் என்று தெரியாமலும் வேறு வழியில்லாமலும் பெரும்பாலான மக்கள் தமக்குத் தேவையான பொருட்களை சேமிக்க முயலுகின்றனர். விலை அதிகரித்தாலும் பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்குமானால் அது ஒரு தீர்வாக இருக்கலாம். ஆனால் மக்களுடைய போராட்டங்களுக்கு தேசியப் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி வேறு பெயர்கள் கொடுக்க முயல்வது நிதானமின்மையின் ஒரு வடிவமே.

கடந்த இரண்டு வருடங்களில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி, அரசாங்கம் கொண்டிருந்த இறுமாப்பு இப்போது வீழ்ச்சியைக் கண்டிருக்கிறது. அந்தவகையில் கடந்த மாதம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமானதொன்றாகப் பார்க்கப்படுகிறது. தான் எதையும் வெல்வேன். எதற்கும் யாருடனும் கலந்துரையாடமாட்டேன். இராணுவம் ஒன்றே போதும் என்றிருந்த நிலைமைக்கு மாற்றம் ஏற்பட்டு கடந்த மாதத்திலேயே அவசர அவசரமாக சர்வகட்சி மாநாட்டை பலருடைய பகிஸ்கரிப்புகளுக்கு மத்தியில் நடத்தினார்.

மற்றையது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்புகள் அவருடைய இயலாமையை வெளிப்படுத்திவிட்டன. இருந்தாலும் இவை இரண்டும் நடத்தப்பட்டேஆகவேண்டிய நிலை தோன்றியிருக்கிறது என்பது மாத்திரம் ஜதார்த்தம். ஆனாலும் மக்களை ஆசுவாசப்படுத்துவதற்கு எந்தவழியும் இன்றி அரசாங்கம் தவித்துக் கொண்டிருக்கிறது.

இன்றைய அன்றாடப் பிரச்சினைகளும் அவற்றினை எதிர்கொள்ளலும் அரசாங்கத்தினை அல்லது நாட்டை நடத்துதலும் என்ற விடயம் பிரச்சினையாக, இலங்கை அரசாங்கத்தினைக் கையில் வைத்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு முன்னே விசுவரூபம் எடுத்து நின்று கொண்டிருக்கிறது.

எந்த அரசியல் கட்சியாலும் இன்னும் 10 வருடங்களுக்கேனும் நாட்டின் ஆட்சியை அசைக்கமுடியாது. இந்த நாட்டை கொண்டு நடத்தக்கூடிய சக்தி, மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கே உள்ளது என்றுதான் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளர்கள் நினைத்துக் கொண்டிருக்கையிலேயே நாடு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. இந்த இடியப்பச் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்க பலரும் முயன்றுகொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சிகள் பயனற்றே போகின்றன.

இருப்பினும் நம்பிக்கையும் நிதானமும் அரசியலுக்கு மாத்திரமல்ல அனைத்துக்குமே முக்கியமானது. இதில் மக்களின் பங்கும் இருக்கிறது. இந்த இடத்தில்தான், கலந்துரையாடவேண்டிய தருணங்கள் பல இலங்கையின் வரலாற்றில் உருவாகியிருந்தாலும் அந்தத் தருணங்களை யாரெல்லாம் திறமையாக கையாண்டிருக்கிறார்கள் என்பதுதான் கேள்வி.

அன்றாட வாழ்வாதாரம் முதல் கல்வி வரை நாட்டின் அனைத்துத் துறைகளிலும் மக்களுக்குப் பிரச்சினைகள் உருவாகிவிட்டன. பொதுப்பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதா என்பதுதான் இலங்கை அரசாங்கத்தின் நிலை. அதற்குள் அரசியலும் பொறாமையும் இருப்பதால் தீர்வைக் காண்பதில் பிரச்சினை ஏற்படுகிறது.

இந்த இடத்தில்தான் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி எழுந்துவரும் எதிர்ப்பலையை சற்றுச் சமாளிக்கலாம் என்று ஜனாதிபதி சிந்தித்திருக்கிறார். அது நல்ல முடிவுதான். ஆனால் அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் நிறைவேறுமா, அந்த முடிவுகளால் உருவாகும் சூழல் மக்களுக்கு நிம்மதியை ஏற்படுத்துமா என்பது தெரியாததே.

இது ஒருபக்கமிருக்க, நீண்டகால பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கின்ற நாட்டின் எதிர்காலத்துக்கு முக்கியமான துறையான அரசியல் பக்கம் ஜனாதிபதி கவனத்தினைச் செலுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

அதன் படிநிலைதான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடனான சந்திப்பு. அது ஆரோக்கியமான முடிவுதான் இருந்தாலும் இதுவும் ஓர் ஏமாற்று வேலைதானா என்று சந்தேகம் கொள்ளவேண்டியுமிருக்கிறது. ஆனால், ஒரு நிரந்தரமான தீர்வை தமிழர்களுடைய நீண்டகாலப் பிரச்சினைக்கு ஏற்படுத்தாதவரையில் இலங்கையில் அரசியல் குழப்பகரமானதாகவே இருக்கும்.

நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கும் முன்னுரிமையளிக்கின்ற மாற்றங்கள் இல்லாத அனைத்து மக்களையும் கௌரவமானவர்களாகக் கொள்கின்ற சிறந்ததோர் அரசியலமைப்பு, மக்களைச் சிரமப்படுத்தாத சிறந்த பொருளாதாரக் கொள்கை, சிறப்பான வெளியுறவுக் கொள்கை, கல்விக் கொள்கை என எதையும் வைத்திருக்காத நாடாகத்தான் இலங்கை இருக்கிறது.

ஒரு பிரச்சினையை மறைப்பதற்கு இன்னுமொரு பிரச்சினை; அதனையும் மறைப்பதற்கு மேலும் பல என்பது மாறி, சமாளிப்புகளும் நடந்தேறுகின்றன. அதிலொன்றாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சந்திப்பு இருந்துவிடக்கூடாது. அதனை விடவும் இப்போது உருவாகியிருக்கின்ற தேசிய அரசாங்கம் என்ற சலசலப்பும் குழப்பமே.

நாட்டில் இதுவரை உருவான அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்துவிடவேண்டும் என்ற இதய சுத்தியான மனதுடன் முயற்சித்த வரலாறுகள் இல்லை. காலம் கடத்தல்களே அவர்களது இலக்காகும்.

தமிழத் தேசிய கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் சந்திப்பு நடந்து முடிந்து விட்டது என்றாலும், எந்தவிதமான நல்லெண்ணத்தையும் கடந்த இரண்டு வருடங்களில் காட்டாத ஜனாதிபதியுடன் முன்னெச்சரிக்கையும் முன்யோசனையும் ஜனாதிபதியைக் கையாள்வது ஆபத்து என்ற விடயம் முன்னிற்கிறது.

எது எவ்வாறிருந்தாலும், நாட்டில் இப்போது தலைவலி, மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரச் சுமையை, பொருள்களுக்கான தட்டுப்பாட்டை எவ்வாறு குறைப்பது, இல்லாமல் செய்வது மக்களுக்கு அன்றாட வாழ்வாதாரமம் தொடர்பில் ஏற்பட்டிருக்கின்ற அச்சத்தினை நீக்குவது என்பவைகள்தான். இதற்கான அரசியலைச் செய்வதற்கு இந்த அரசாங்கத்தினால் முடியுமா அல்லது புதிய அரசாங்கமான என்பது கேள்விதான். புதிய அரசாங்கம் என்றால், அதனைத் தேர்தல் மூலமாக நடத்துவது அடிமுட்டாள் தனமாக இருக்கும் என்றவகையில் நிதானமான கைமாற்றம், இசைந்த, அனுசரித்த, இணைந்த செயற்பாடு ஒன்றே சாத்தியமான தீர்வு. எவ்வாறானாலும் குழப்பங்கள் இல்லாத அமைதியான மகிழ்ச்சியுடனான வாழ்க்கையே மக்களின் எதிர்பார்ப்பு.

இந்த இடத்தில், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் கருத்து கவனத்திலெடுக்கப்படவேண்டும். “இன்று அரசாங்கம் தோல்வியைடந்துள்ளது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. நாட்டை பின்னடை யச் செய்துள்ளனர். அதை உடனடியாக நிறுத்த வேண்டும். அதற்கு இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல் சக்திகளும் ஒருமித்த இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். ஒவ்வோர் அரசியல் கட்சியும் தனித்தனியாக அரசியல் செய்வது எமக்குப் பிரச்சினை அல்ல. ஆனால், நாடு விழுந்துள்ள இந்தப் படுகுழியிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அனைத்து அரசியல் கட்சிகளும் தலைவர்களும் ஒருமித்த பொது உடன்பாட்டுடன் செயற்பட வேண்டும். இன்று நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி தீர்க்க முடியாத பிரச்சினையல்ல. ஒரு கட்டத்தில் இந்தியாவும் இதே போன்ற நெருக்கடியை சந்தித்தது. ஆனால், இந்தியா அதை மிகத் துல்லியமான கூட்டு முயற்சியால் தீர்த்து வைத்தது. நாம் அனைவரும் அத்தகைய அணுகுமுறையை எடுக்க வேண்டும்” என்றார்.

## கடிதங்கள்

### மணல் அகழ்வு: பொலிஸார் முழு ஒத்துழைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில், பொலிஸாரின் பாதுகாப்பு மற்றும் முழுமையான ஒத்துழைப்புகளுடனேயே மணல் அகழ்வுகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொது அமைப்புகளால் குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பில், பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை.

கடந்த சில நாள்களாக, முரசுமோட்டைப் பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வுகளால், விவசாய வீதிகள், விவசாய நிலங்கள், நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் முற்றாகச் சிதைந்து வரும் நிலையில், பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள், மணல் அகழ்வைத் தடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்ட போது, சம்பவ இடத்துக்கு மணல் அகழ்வில் ஈடுபடும் நபர்களுடன், சிவில் உடையில் வருகை தந்த பொலிஸார், இதைத் தடுப்பதாக கூறிவிட்டுச் சென்ற மறுநிமிடமே, அவர்களின் பாதுகாப்புடன் மணல் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, பளை பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுத்து வந்த கிராம அலுவலர், பிரதான வீதியால் சென்றபோது, மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் டிப்பர் வாகனத்தால் மோதிய சம்பவம் இடம்பெற்றது. இதை, ஒரு விபத்தாக பொலிஸாரால் பதிவு செய்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேலியே பயிரை மேயும் அவலத்தில் இருந்து ‘கிளிநொச்சி’யைக் காப்பாற்ற, ஆக்கபூர்வமானதும் திடமானதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலதரப்புகளிடம் இருந்து முன்வைக்கப்படுகின்றது.

-யது பாஸ்கரன்



# சிங்காரச் சிரட்டைகள்

வ. சக்திவேல்
shagthivel@gmail.com



'கைத் தொழில் ஒன்றைக் கற்றுக் கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்', 'உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே' எனும் தத்துவங்களை உணர வைக்கும் பாடல் வரிகளை நாம் கேட்டிருக்கின்றோம். பல்தேசியக் கம்பனிகளின் உற்பத்திகளும் ஏற்றுமதி, இறக்குமதிகளுமாக, உலகம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், மேற்படி வரிகளுக்குக் கட்டியம் கூறுவது போன்று, கிராமங்களில் சிலர் தமது கைத்தொழில் முயற்சிகளை இன்னும் கைவிடாது மேற்கொண்டு வருகிறார்கள்.

தினமும் சமையலுக்குப் பயன்படுத்திவிட்டு வீசி எறியப்படும், அல்லது எரிக்கப்படும் சிரட்டைகளைப் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தையே உருட்டிச் செல்லும், ஒருவராகத் தனித்துவத்துடன் திகழ்கின்றார் அந்தோணிப்பிள்ளை சுலோஜன்.

மட்டக்களப்பு மாவட்டம், படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் பாலையடிவட்டைக் கிராமத்தில் வாழும் இவர், தேநீர் குவளை, உப்பு வைக்கும் பாத்திரம், வீடுகளிலும் கோவில்களிலும் பாவிக்கும் சந்தணம், குங்கும், விபூதி வைக்கும் தட்டுகள், கறிகள் பரிமாறும் குவளைகள், தண்ணீர் அருந்தும் பாத்திரம், பூச்சாடி, மயில், குருவி, கொக்கு, ஐஸ்கிறீம் கப், கைகளைக் தொற்று நீக்கும் திரவங்ளைப் பாவிக்கும் பாத்திரம், கீடெக், அகப்பைகள் உள்ளிட் பல பாவனைப் பொருட்களை கலாரசனையுடன் கண்களைக் கொள்ளைகொள்ளும் அழகுடன் உற்பத்திசெய்து வருகின்றார்.

சுலோஜன் கூறும்போது, "ஆரம்பத்தில் நான் தச்சு வேலை செய்து வந்தேன். பின்னர் நோய் ஒன்று என்னைத் தாக்கியது. அதிலிருந்து தச்சு வேலையை விட்டுவிட்டு, கோவில்களுக்குரிய எருது, மூசுகம், மயில் உள்ளிட்ட வாகனங்களை, மரங்களில் செதுக்கி பல கோவில்களுக்கு வழங்கி வந்தேன். வெளியில் நடமாடித் திரிவதற்கு எனது உடல்நிலைமை இடம்கொடுக்கவில்லை.

"வீட்டிலிருக்கும் நாம், பிறரிடம் கையேந்தாமல் சிரட்டையில் அகப்பை செய்து விற்றால் என்ன என்ற யோசனை எழுந்தது. அகப்பைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய ஆரம்பித்தேன். பின்னர், சிரட்டைகளைப் பயன்படுத்தி தேநீர் குவளை, பூச்சாடி, அழகு சாதனைப் பொருட்கள் செய்வது தொடர்பில் ஊடகங்களில் பார்த்து அறிந்தேன். சிரட்டையில் அகப்பை செய்யும் நமக்கு, வேறு பொருட்களை ஏன் உற்பத்தி செய்ய முடியாது என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது.

"தற்போது, நானும் மனைவியும் சேர்ந்து உற்பத்திகளை மேற்கொண்டு வருன்றோம். 2007ஆம் ஆண்டிலிருந்து இதனை மேற்கொண்டு வருகின்றோம். எனினும், இவைகளை உற்பத்தி செய்வதற்கு, நுண்ணிய கலை நுணுக்கங்களும், மிகவும் பொறுமையும் அவதானமும் தேவை.

"நாம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உள்ளூரில் கேள்வி, மிக மிகக் குறைவாகவே உள்ளது. நமது உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், நியாய விலைக்கு விற்பனை செய்யலாம். அதிலிருந்து நாம் ஓரளவு எதிர்பார்க்கும் இலாபம் ஈட்டலாம் எனவும் பலரும் தெரிவிக்கின்றனர். ஆனால், அது இதுவரைக்கும் எமக்கு கைகூடி வரவில்லை.

"இதுவரைக்கும் எமது இத்தொழிலுக்கு யாரும் உதவமுன்வரைவில்லை. ஆனாலும், இத்தொழிலை மேலும் மேம்படுத்த வேண்டும் எனச் சிந்திக்கின்றேன். அதற்கு சில தடைகளும் உள்ளன. நிலையான துளையிடும் மெசின், வெட்டுவதற்குரிய மெசின், கடைச்சல் மெசின், உள்ளிட்ட பல சிறிய மெசின்கள் தேவையாகவுள்ளன. புதியவர்களை இத்தொழிலைப் பழக்கி எடுப்பதற்குரிய கொட்டகை வசதியும் எம்மிடம் போதாதுள்ளது.

"இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வசிப்பவர்கள் அதிகம்பேர் உள்ளார்கள். நாம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அவர்கள் வாழும் நாடுகளில் அதிக சந்தைவாய்ப்பு உள்ளதாக அறிகின்றோம். எனவே எமது உற்பத்திகளை அவ்வாறானவர்கள் கொள்வனவு செய்தாலும், அல்லது ஏற்றுமதி செய்தாலும், நாம் இங்கு 300 ரூபாய்க்கு விற்பனை செய்யும் பொருளை 600 ரூபாய்க்கு வெளிநாடுகளிலுள்ளோருக்கு விற்றால் எமது வாழ்வாதாரமும் மேம்படும்.

"தற்போதுள்ள இளைஞர்கள், பிறரிடம் கையேந்தி கூலி வேலைக்குப் போகின்றார்கள். யுவதிகள் வீட்டிலுள்ளார்கள். நாம் இத்தொழிலை பழக்கி விடுகின்றோம் வாருங்கள் என அழைத்தாலும் வருகின்றார்கள் இல்லை. மாறாக, எனது தொழிலுக்கு போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி ஆர். இராகுலநாயகி, அதனோடிணைந்த சிறுகைத்தொழில் உத்தியோகஸ்தர்கள் எனக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழக்கி வருகின்றார்கள்" எனத் தெரிவிக்கின்றார்.

எனினும், சிரட்டையை மூலப்பொருளாக் கொண்டு தொழில் முயற்சிகளை மேற்கொள்பவர்களுக்கு, தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகளை மேற்கொள்வதற்குரிய திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளோம். இவ்வாறு ஒரேதொழில்களை மேற்கொள்பவர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து, ஓர் அமைப்பாக உருவாக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இயந்திர வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சிரட்டையை மூலப் பொருளாகக் கொண்டு, சுமார் 15இற்கு மேற்பட்டவர்கள், தொழில் முனைபவர்களாக பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில், சிரட்டையிலிருந்து உற்பத்தி செய்யும் மூலப்பொருட்களை வடிவமைத்தல் தொடர்பான பயிற்சி நெறி ஒன்றும் அடுத்த மாதம் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் வலது குறைந்தோரையும் உள்வாங்கியுள்ளோம் வெல்லாவெளியில் இவர்களுக்கான உற்பத்தி நிலையம் ஒன்றை உருவாக்குவதற்குரிய யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் இவர்களின் உற்பத்திகளுக்கு உள்ளூரில் சந்தைவாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. எனினும் மட்டக்களப்பு, கல்முனை போன்ற ஒருசில இடங்களில் இந்த உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு வாழ்வாதாரத் தொழிலை முன்கொண்டு செல்பவர்களுக்கு சமுர்த்தி திட்டத்தினூடாக, இலகு கடன்வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக போரதீவுப் பற்றுப் பிரதேச செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தமிழர்கள் உலகெங்கும், பரந்து சென்று வாழ்ந்தாலும், அவர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த கிராமங்களை ஒருகணம் சிந்திக்கத் தவறாமல், அவர்களால் முடிந்த உதவிகளையும் மேற்கொண்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

அதேபோல் சுலோஜன் போன்றோர் தமது நோய் நிலைமையையும் கருத்திற் கொள்ளாது, பிறரிடம் கையேந்தாமல் சுயதொழிலை மேற்கொண்டு வரும் நிலையில், அவ்வாறானவர்களுக்கு உந்துசக்தியளிக்க வேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகும்.

அனைவரும் வீசி எறியும் சிரட்டைகளைப் பயன்படுத்தி, கலை நுட்பமாக அதனுடான வாழ்வாதாரத்தை மேற்கொண்டு செல்லும் இவ்வாறானவர்களின் உற்பத்திகளை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், உள்நாட்டில் தகுந்த சந்தைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கவும், அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், பயிற்சிகளையும் பெற்றுக்கொடுக்க தன்னார்வ அமைப்புகளும் அரசாங்கமும், முன்னிற்க வேண்டும் என்பதோடு, புலம்பெயர் தமிழ் மக்களும் இவர்களின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய முன்வரும் பட்சத்தில், இன்னும் பல தொழில் முயற்சியாளர்கள் உருவாகி, வறுமையை விரட்டலாம் என்பதுவே அவைரினதும் எதிர்பார்ப்பாகும்.

# 'நூறு மலர்கள் மலரட்டும்'

வெள்ளிக்கிழமை (25) 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் மூன்று நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.











## முதல்நாள் நிகழ்வு:

'நூறு மலர்கள் மலரட்டும்' நிகழ்வின் முதல் நாள் (25.03.2022) நிகழ்வாக, சிவசேகரம் கவிதைகள் நூலின் அறிமுக நிகழ்வும் சிறுவர் அரங்க விழாவும் நடைபெற்றன. அவற்றின் காட்சிகள் இவை.







## இரண்டாம் நாள்

சனிக்கிமை (26) இரண்டாம் நாள் நிகழ்வுகளான ஈழத்து இலக்கியங்களை அறிவோம் – புத்தகங்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் மற்றும் அரங்க விழாவில் இடம்பெற்ற 'சவரக்கத்தியும் குரல்வளையும்', 'இருளூறை வாள்' ஆகிய இரண்டு நாடகங்களின் ஆற்றுகைகளின் காட்சிகள் இவை.











## மூன்றாம் நாள் நிகழ்வு

ஞாயிற்றுக்கிழமை (27) மூன்றாம் நாள் நிகழ்வான இளையோர் பார்வையில் யாழ்ப்பாண இதழ்கள் – யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் கலை இலக்கிய இதழ்கள் தொடர்பான கலந்துரையாடலின் காட்சிகள்





# பிரியாவிடையும் சிறப்புமலர் வெளியீடும்

கல்விப் பணியில் 37 வருடம் சேவையாற்றி, ஓய்வு பெற்றுச் செல்லும் வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம் பரீட்டைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் புதன்கிழமை (30) நடைபெற்றது.
ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் எம்.யூ.எம். முகைதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிபர் எம்.ரீ.எம். பரீட் கல்வித்துறைக்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், அவரது வாழ்வியல் தொடர்பாகத் தொகுக்கப்பட்ட 'எம்.ரீ.எம்.பரீட் எனும் ஆளுமை' என்ற சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. அத்துடன், அவரது அர்ப்பணிப்பு மிக்க சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்கள், பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.
இந்நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜே. தாஜுன் நிஸா, உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. ஜாபீர் கரீம், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்களும் தகவலும்: எச்.எம்.எம். பர்ஸான்)






# டீ.எஸ். சேனநாயக்கவில் கலைவிழா

கொழும்பு, டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் 2021ஆம் ஆண்டுக்கான கலைவிழா புதன்கிழமை (15.03.2021) ஆர்.ஐ.டி. அலஸ் மண்டபத்தில் நடைபெற்றது.
பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.ஆர்.வி. லோஷனை, கல்லூரியின் அதிபர் பிரசன்ன உடுமுகந்திரம் கௌரவித்தார். கல்லூரியில் இருந்து ஓய்வுப்பெற்றுச்சென்ற உபஅதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் முதல்வரை தமிழ்ப்பிரிவு உப அதிபர்களான திருமதி யோ. சிவபாலன், பா. கிருபாகரன் ஆகியோர் கௌரவித்தனர். அத்துடன், ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.






# 'கலைச்சரம்' நூல் வெளியீடு

மூதூர் மதார் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் கலாபூஷனம் கலைமேகம் ஏ.எஸ். இப்றாஹீம் எழுதிய 'கலைச்சரம்' நூல் வெளியீடு சனிக்கிழமை (26) மூதூர் பேர்ல் கிராண்ட் மண்டபத்தில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் வரவேற்புரையை எஸ்.ஐ. நிபாஸூம் தலைமையுரையை ஓய்வுநிலை இலங்கை நிர்வாக சேவை அதிகாரி எம்.சீ.எம். ஷெரீப்பும் நூல் அறிமுகவுரையை ஆசிரியர் ஏ.எஸ். அப்துல்லாவும் நூல் வெளியீட்டுரையை மதார் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் எம்.எம்.எம். றபீக்கும் நூலின் நயவுரையை சுஹைதா ஏ கரீமும் நன்றியுரையை விழுதுகள் நூலின் ஆசிரியர் எம்.எம். மனாஷீர் நத்வியும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை ஜே.எம்.இஹ்ஸான் நிகழ்த்தினார்.

(படங்களும் தகவல்களும்: அ. அச்சுதன்)





# சாமஸ்ரீ தேசகீர்த்தி விருது

சுகாதாரம், கல்வி, சமூக சேவைகள், ஊடகத்துறை, கலைத்துறை, அழகுக்கலை போன்ற துறைகளில் தேசிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பேருக்கு 'சாமஸ்ரீ தேசகீர்த்தி' விருதை இலங்கை மனித உரிமைகள், மக்கள் பாதுகாப்பு அமைப்பு வழங்கி கௌரவித்தது.
கலாநிதி எப்.எம். சரீக் தலைமையில் நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வு, புதன்கிழமை (30) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது.
இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியபதி கலபத்தி, இலங்கை மனித உரிமைகள், மக்கள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் ஏ.ஜே.எம்.பாயிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.
இதன்போது, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ. ஸ்ரீதர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என். பிள்ளைநாயகம் உள்ளிட்ட 30 பேருக்கான சாமஸ்ரீ தேசகீர்த்தி விருது வழங்கி கௌவிக்கப்பட்டது.

(படங்களும் தகவலும்: பைஷல் இஸ்மாயில்)



# கனடாவில் சுவாமி விபுலாநந்தரின் 130ஆவது ஜனனதினம்

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 130ஆவது ஜனனதினத்தை முன்னிட்டு, ஸ்காபுறோ நகரில் சுவாமி விபுலானந்தர் கனடா கலை மன்றத்தின் தலைவர் எல். புருஷோத்தமன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (27) கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இந்தியா, காசியிலிருந்து மெய்நிகர் இணையவழி மூலம் இராம கிருஷ்ண மிசனின் மட்டு. மாநில உதவிமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் உரையாற்றியிருந்தார்.
சுவாமி விபுலானந்தர் கலை மன்றத்தின் செயலாளர் நித்தி சிவானந்தராஜா நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். கோணேஸ்– கீதா தம்பதியினர் மங்கல விளக்கேற்றினர். த. விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை, சுதர்ஷன் பத்மநாதன் ஆகிய இருவரும் விபுலானந்தர் அடிகளாரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்தார்கள். சங்கீதபூசணம் திருமதி குலநாயகி விவேகானந்தன், அடிகளாரின் புகழ்பாடும் பாடல்களைப் பாடினார். கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம், மா. நல்லரத்தினம், சட்டத்தரணி சாம் தில்லையா, அமெரிக்கா வாழ் டொக்டர் தமிழ்ச்செல்வி முருகேசன், கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

(படங்களும் தகவலும்: வி.ரி. சகாதேவராஜா – காரைதீவு நிருபர்)








# மூதூரில் 37 எழுத்தாளர்கள் கௌரவிப்பு

மூதூர் பிரதேசத்தில் உள்ள எழுத்தாளர்களுக்கான கௌரவிப்பும், 'சாகரம்' நூல் வெளியீட்டு விழாவும் வியாழக்கிழமை (31) சம்பூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எ. அரூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மூத்த எழுத்தாளர்கள் 22 பேரும், இளம் எழுத்தாளர்கள் 15 பேருமாக மொத்தம் 37 எழுத்தாளர்கள் நினைவுச் சின்னம், பொற்கிளி என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
இதன்போது கலைநிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.
இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணண், கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் செ. யோகராசா, மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வறா நளீம், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக் உள்ளிட்ட பலரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

(படங்களும் தகவலும்: தீஷான் அஹமட்)





# சிறப்பாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு கௌரவம்

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் 2021ஆம் ஆண்டில் சிறப்பாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வும், 2022 ஆம் ஆண்டுக்கான பயிற்சி கருத்தரங்கும் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனால் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் தேசிய, மாவட்ட, பிரதேச ரீதியில் இலக்கை அடைந்த உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

(படங்களும் தகவலும்: நூருள் ஹுதா உமர்)

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 02 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.